Registered No. M. 1014.

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.
வீடுபேறில்.

வெண்டாமரை உ.	1914-ம் ஆ ஆகஸ்ட் மீ	இதழ் அ.

பத்திராதிபர்:— சி. பங்காருப் பத்தர்,
கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்
புதுவை.

வருஷ சந்தா ரூ 1	வெளிநாட்டுக்கு ரூ 2
தபாற்கூலி அணா 4	தனி சஞ்சிகை அணா 2

Saigon Sinnaya Press, Pondicherry.

உள்ளுறை.

பக்கம்.

இரும்பைக் கோயில் கல்வெட்டு: — ஸ்ரீமான் திரு. சுப்பிரமணிய தேசிகர், காஞ்சிபுரம். 171

ரமணி (ஓர் காதற் கதை): — ஸ்ரீமான் சு. அ. சுப்பராயப் பிள்ளை, புதுவை. 172

தோடர்கள்: — ஸ்ரீமான் ஆர். பார்த்தசாரதி அய்யங்கார், கவர்ன்மெண்ட் பாடசாலை உபாத்தியாயர், புதுவை. 177

பிரகிருதி சாஸ்திரம்: — பாரதி பக்தன்.... 180

நமக்கு வேண்டியவர் யார்:—ஸ்ரீமான் துரைசாமிமுதலியார், கவர்ன்மெண்ட் பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர், பாகூர். 183

சிவகசிந்தாமணி: — பத்தியாதிபர். 187

நூல்நயந்தெரித்தல்:—ஸ்ரீமான் வித்வான், ஜி. சுவாமிநாதன் ஆசாரி, கோட்டாறு. 190

நியாயமாலா: — ஸ்ரீமத் அநந்தபத்மநாபஸ்வாமிகள், காஞ்சிபுரம். 191

பிரணவப்பகுதி: — ஸ்ரீமான் T. S. அங்கமுத்துமுதலியார், உபாத்யாயர், கிளாப்பாளையம். 192

சமாசாரம். 194

503

உ

ஸ்ரீவாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை உ.] 1914-ம் ஆ ஆகஸ்ட் மீ [இதழ் அ.

இலௌகிகப் பகுதி.

இரும்பைக் கோயில் கல்வெட்டு.

தொண்டை மண்டலத்திலே தென்பாலில், பெண்ணை வடகரையான மாத்தூர் நாட்டில், ஒழுகறையென்ற குலோத்துங்கசோழநல்லூர் பண்டையில் மிக்க பெருமைவாய்ந்த அறிவர், அரசர், வணிகர், வேளாளர் முதலிய பல் சாதியர் நிரம்பப்பெற்றதான ஒரு பெரிய நகரமாயிருந்தது. அது பிற்காலத்தில் அழிந்து சிறிய ஊராய்விட்டது.

இத் தென்னாற்காடு ஜில்லாவின் வடபாகங்களில் உள்ள பல பழைய தேவஸ்தானங்களின் கோயில்களுள் இவ் வொழுகறையைப் புகழாத இடமே கிடையாது. அவற்றுள் இரும்பை, அரசிலி முதலிய ஊர்கள் ஒழுகறையின் தேவத்தலங்களென்றே யெண்ணப்பட்டிருந்தன என்பது மேற்படி கல்வெட்டுகளால் விளங்குகின்றது. அவற்றுள் ஒன்றைக் கீழ் வரைவாம்.

திரு விரும்பைக் கோயிலில் மேல்பால் வடது உள்ள கல்வெட்டு.

சுவஸ்தி ஸ்ரீ திரு அரசிலி உடையாா ஆலால சுநதா நாயனாா கோயிற தானததாறகும திரு விருமபை உடையாா திருமாகாளமுடைய நாயனாா தானததாறகும சிறுமுறி

கோமாற பனமா திரிபுவனச சககரவததி ஸ்ரீ விககிரம பாணடிய தேவறகு யாணடு ஹு இரணடாவது ஜயஙகொணட சோழமணடலதது மாததூா நாடடு ஒழுகறையான குலோததுஙக சோழநலலூா திரு அரசிலி ஆலால சுநதர.................. திருநாமததுககாணி ஆ......விளைநி......ம கொலலைப புனசையும திரு விருமபை உடையாா திருமாகாளமுடைய நாயனாா திருநாமததுககாணியான திருவிருமபையும அகழகரையும விளை நிலமும கொலலைப புனசையும தாஙகல பறறு கக......பெருமாள சுநதர பாணடிய தேவறகு பத......டாவது வரையும பூசைககு பதினைஞசு செல விட முதல நீககி நீககி நினற முதல வகுபபான பொனனுககு உடலாக பணடாரததுக கடமை இறுததுப போதுகையில் இவ வகுபபான பொன னுககு உடலாக இறுததுப போநத முதலும இநநாயனமாா திருநாமததுக காணியான இவவூாகளில செடடிறை தறிககடமை ஆசு பொதுமககள போக கடமை எ.ரிமீன பாடடம செககு காடமை அழுகல சாககு அஙகா டிப பாடடம உளளிடட காசாய வற.........கள உடபட இரணடாவது நாள முதல இநநாயனமாறகுப பூசைககும திருபபணிககும உடலாக ஊற கீழ இறையிலி ஆநநததது இநநாள முதல இவவூாகளில இபபடிக ளால உளள முதலகள இறையிலியாக சநதபடிககு இவ ஒலை இபபடி யாடாககொணடு சநதிராதிததவரையும இபபடி செலவதாக கலலிலும செமபிலும வெடடிககொளளவும பாறபது இபபடிககு இவை அவனிவிச சாதிர மூவேநத வேளான எழுதது இவை அருமொழிப பலலவரையன் எழுதது இவை தெனனவதரையன எழுதது இவை விழிஞததரையன எழுதது இவை மூவேநதரையன எழுதது இவை அஙகாரமன எழுத்து இவை சேதா மூவேநத வேளாளன எழுதது இவை சிஙகளத தரையன எழுதது இவை விசையபாலன எழுதது இவை கொடடிளமபாககமுடை யான திருவலஞசுழி உடையான எழுதது இவை...............சாராயன எழுதது இவை குருகுலததரையன எழுதது இவை தெனனவன பலல வரையன எழுதது.

திரு. சுப்பிரமணிய தேசிகர்,

காஞ்சீபுரம்.

ரமணி.

ஓர் காதற் கதை.

(தொடர்ச்சி.)

விஜயரங்கதாசர் சட்டெனச் சற்றுப் பின்புறமாய்ச் சாய்ந்தனர். வியப்பு, வெருட்சி, கோபம் இம்மூன்றுங் கலந்த பார்வையுடன் சுவா

505

மியை நோக்கினர். சுவாமியும் தடியை ஓங்கியதை நிறுத்திப் புன்னகையுடன் “என்ன சொல்லுகிறீர்?” என்றனர்.

“நடேசா!” என்று தன்னாலியன்றமட்டும் உறக்கக் கூவினர் கிழவர்.

“நடேசனையா அழைக்கிறீர்! அதற்கு என் கழுதையைப்போல் இப்படிக் கத்தவேண்டும்! நானே அழைத்து வருகிறேன். நடேசனையும் அழைத்து வருகிறேன். உம்முடைய வீட்டிலுள்ள ஜனங்களெல்லோரையும் அழைத்து வருகிறேன். போலீஸ் சேவகரையும் அழைத்து வருகிறேன். எல்லோருடைய முன்னிலையிலும் உம்முடைய திருவிளையாடல்களைப் பற்றிப் பிரசங்கித்து உமது கைகளுக்குத் திருக்காப்புத் தரித்து உம்மைப் பள்ளிக்கூடத்திற் கனுப்பிவிடுகிறேன்” எனக் கழறிக் கதவருகே சென்று தாழ்ப்பாளை இழுத்துக் கதவைத் திறந்து வெளிச் செல்லலாயினர் சுவாமி.

“வேண்டாம் வேண்டாம் வாருங்கள்” என்று கூவினர் பிரபு.

“தங்கள் உத்தரவுப்படி இதோ வந்தேன்” என்று சந்யாசி நகைத்துக்கொண்டே திரும்பிவந்து சாய்வு நாற்காலியில் அமர, சற்று நேரம் இருவரும் மௌனமாயிருந்தனர். பின்பு மீண்டும் சுவாமி, “என்ன சொல்லுகிறீர்? எனக்கு நாழிகை யாகிறது” என்றனர்.

“நான் என்ன சொல்லவேண்டிய திருக்கிறது?” என்றனர் பிரபு.

“நீராகவே கலியாணத்தை நிறுத்துகிறீரா, அல்லது நானே அதை நிறுத்தி உம்மை ஜெயிலுக்கனுப்பட்டுமா?”

“ஜெயில் ஜெயில் என்று பயமுறுத்துகிறீரே! எப்படி என்னை ஜெயிலுக் கனுப்புவீர்?”

“எப்படியா! இப்படித்தான், இந்த வாசல் வழியாய்ப் போய், கீழே இறங்கி, வெளியே போய், போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கண்டு உம்முடைய அக்கிரமங்களை அவருக்குச் சொல்லி ——”

“நான் என்ன அக்கிரமஞ் செய்துவிட்டேன்! நீர் கண்டுபிடித்து விட்டீர்!”

“உம்முடைய அக்கிரமங்களை நான் கண்டுபிடிக்கவில்லையென்று இன்னும் கனவு காண்கிறீரோ?”

“அந்த அக்கிரமத்தைத்தான் சொல்லுமே பார்ப்போம்.”

“ நான் போலீசாருக்குச் சொல்லவேண்டுமே யொழிய உமக்குச் சொல்லவேண்டுமென்ற ஆவசிகமில்லை. என்றாலும் உம்மை ஜெயிலுக் கனுப்ப என்னால் இயலுமோ இயலாதோ என்று நீர் சந்தேகப்படுகிறபடி யால், என்னால் எந்த க்ஷணத்திலும் உம்மை ஜெயிலுக்கனுப்ப இயலும் என்பதை உமது சந்தேகந்தீர நிரூபித்துக் காட்டுகிறேன். அதன்பின் பேனும் நீராகவே கலியாணத்தை நிறுத்தத் தீர்மானிக்கிறீரா என்று பார்ப்போம். ”

“ உம்மிஷ்டப்படியே செய்யும். ”

சுவாமி உடனே நாற்காலியிலிருந் தெழுந்து கதவருகே சென் றார். “ எங்கே போகிறீர் ” என்றார் விருத்தர். “ நிரூபிக்க ஒரு சாட்சி யைத்தான் அழைத்துவரப் போகிறேன். போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகவில்லை. பயப்படாதேயும் ” என்று சொல்லி சந்யாசி அகன்று போய், சற்றுநேரத்தில் முத்தம்மாளோடு மீண்டும் விஜயரங்கதாசரிருந்த அறையினுட் புகுந்து தாம் மாத்திரம் நாற்காலியி லுட்கார்ந்தனர். முத் தம்மாள் அஞ்சி ஒதுங்கி நின்றாள்.

“இவள் யாரென்று உமக்குத் தெரியுமல்லவா” என்றார் சந்யாசி.

“ இவளா! இவள்—என்னுடைய கணக்கப்பிள்ளை வீட்டு வேலைக் காரி ” என்றனர் விஜயரங்கர்.

“ முத்தம்மா! நீ உன் எஜமானனுக்குச் சொல்லவேண்டியதைச் சொல்லிவிடு. அவர் என் சொற்படி நடவாவிட்டால் அவரோடு நீயும் ஜெயிலுக்குப் போகும்படி நேரிடும். ஆனால் நீ என்னையே நம்பிவிட்டா யாகையால் உன்னை மாத்திரம் நான் காப்பாற்றிவிடுவேன். பயப் படாதே ” என்றனர் சுவாமி.

முத்தம்மாள் விஜயரங்கப் பிரபுவை நோக்கி “ பங்களாவிலிருந்து ரமணியம்மாள் மாயமாய்க் காணமற்போய்விட்டாள். அவள் காணமற் போன வன்றிராத்திரி இந்தச் சாமி ரமணியம்மாளைத் தேடிப் பங்களா வுக்கு வந்து என்னை மிரட்டியதில் நான் எல்லா ரகஸ்யங்களையும் அவருக் குச் சொல்லிவிட்டேன் ” என்றனள்.

“ என்ன! ரமணியம்மாளாவது! பங்களாவாவது! ரகஸ்யமாவது! வேலைக்கார நாயே! என் முன்னே உனக்கு இவ்வளவு தைரியமா! பட் டாபிராம்! பட்டாபிராம்! பட்டாபிராம்! பட்டாபிராம் ” என்று உரக்கக் கூவினர் பிரபு.

“ சரி, பட்டாபிராமும் வரட்டும் ” என்றார் சுவாமி. சற்றுநேரத் தில் பெரிய கணக்கர் பட்டாபிராம் வந்து முத்தம்மாளைக் கண்டு மருண்டு

விழித்தார். விஜயரங்கர் "பட்டாபிராம்! இந்தச் செறுக்கி என்னைக் கண்டபடி தூஷிக்கிறாள். கழுத்தைப்பிடித்து அவளை வெளியே தள்ளு. இனி அவள் உன் வீட்டு வாசலை மிதிக்கக்கூடாது" என்றனர்.

"அவளைத் தொட்டால் நீயும் ஜெயிலுக்குப் போவாய்" என முழங்கினர் சுவாமி. பட்டாபிராம் மௌனமாய் அசைவற்று நின்றார். சந்யாசி மீண்டுங் கோஷிக்கலாயினர்.

"மகாராஜ ராஜஸ்ரீ மகா கனம்பொருந்திய விஜயரங்க மகாப் பிரபு! இனி நீங்கள் இப்படி நடிப்பதிற் பிரயோஜனமில்லை. நீரும் உம்முடைய புத்திரசிகாமணி கண்ணையனும் சேர்ந்தாலோசித்து வக்கீல் மிஸ்டர் ஜனார்த்தனருடைய அத்தை பெண் ரமணியம்மாளை நள்ளிரவில் திருடிக்கொண்டுபோய் விஜய விலாச பங்களாவில் சிறைவைத்திருந்தது சம்பந்தமான சகல ரகஸ்யங்களும் எனக்குத் தெரிந்துவிட்டன. நீர் சாவித்திரியம்மாளை விவாகஞ் செய்துகொள்ளாதிருக்கச் சம்மதித்தால் நான் வாயை மூடிக்கொண்டிருப்பேன். இல்லாவிட்டால் நீர் ஜெயிலுக்குப் போகும்படி நேரிடும்."

"பட்டாபிராம்! இந்தத் திருட்டுச் சாமியையும் அந்த வெட்கங் கெட்டவளையும் இந்த நிமிஷமே வெளியே தூரத்து" என்றார் பிரபு. ஆனால், பட்டாபிராம் சுவாமியை நோக்கி, "தூஷண வார்த்தைகள் ஏன்? அமைதியாய்ப் பேசுகிறதுதானே" என்று சொன்னார். "நீ தூரத்தா விட்டால் நானே தள்ளுகிறேன் பார்" என்று விஜயரங்கர் ஆவேசத்துடன் எழுந்து முத்தம்மாளருகே சென்று தன் கையை ஓங்கி அவளை அடிக்க முயற்சித்தார். ஆனால், அந்த நிமிஷத்தில் சுவாமி முத்தம்மாளுக்குக் காவலாய்ப் பாய்ந்து கிழவர் அடித்த அடி தன் மந்திரத் தடியின் யானை முகப்பிடியில் விழுமாறு தாங்கினார். "பொறுங்கள், பொறுங்கள், ஆத்திரப்படாதேயுங்கள், எல்லாவற்றையும் அமர்ந்து பேசுவோம்" என்று பட்டாபிராம் விஜயரங்கதாசர் கையைப் பற்றி விலக்கினார்.

"கலியாணத்தை நிறுத்துகிறாயா இல்லையா" எனக் கர்ஜித்தனர் சுவாமி.

"கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதித்தாலும் நான் சடகோபர் பெண்ணைக் கலியாணஞ் செய்தே முடிப்பேன்" என்றார் பிரபு.

"உன் தீர்மானம் அதுவானால் என் தீர்மானத்தைக் கேள். முதலாவது, உனக்கும் சாவித்திரியம்மாளுக்கும் விவாகம் நிறைவேறவே நிறைவேறாது. இரண்டாவது, நீ ஜெயிலுக்குப்போய்ச் சிக்ஷையடைவாய். மூன்றாவது, உன் பங்களாவிலுள்ள சுரங்கத்திலிருந்து உன் குடும்ப

508

சம்பந்தமான சில ரகஸ்யங்களும் பத்திரங்களும் என் கையிற் சிக்கியிருப்பதால் அவைகளைக்கொண்டு, நீ உன் ஆஸ்திகளையெல்லாம் இழந்து சோற்றுக்குத் திண்டாடும்படி செய்துவிடுவேன்—முத்தம்மா! வா போகலாம்" என்று கூறி சுவாமி செல்ல அடியெடுக்கவே, விஜயரங்கர் "என்ன சொன்னாய்? சுரங்கமா" என்றனர். "ஆமாம் உன் பங்களாவிலுள்ள சுரங்கமும் அதற்குப் போகும் ரகஸ்ய வழியும் எனக்குத் தெரியும்" என்றார் சுவாமி.

"உனக்கு எப்படித் தெரிந்தது?"

"முத்தம்மாள் சொன்னாள்."

"உனக்கு எப்படித் தெரிந்தது" என்று முத்தம்மாளை நோக்கினார் கிழவர்.

"எனக்குக் கண்ணையன் சொன்னார். போலீசாரேனும் வேறு யாரேனும் ரமணியம்மாளைத் தேடிவந்தால் அவளை உடனே சுரங்கத்தில் ஒளித்துவைக்கும்படி சுரங்கத்தின் ரகஸ்ய வழியைக் கண்ணையன் எனக்குக் காட்டினார். நான் சாமிக்குக் காட்டினேன்" என்றாள் முத்தம்மாள். விஜயரங்கர் பெருவியப்புடன் திகைத்து நின்றார். "கடைசியாய் ஒருமுறை கேட்டுவிடுகிறேன். நீ கலியாணத்தை நிறுத்துவாயா, மாட்டாயா" என்றார் சுவாமி. "அது ஒருகாலும் கூடாதகாரியம்" என்று உத்தரமுரைத்தார் பிரபு. "சரி, நீ படுகிற பாட்டைப்பார். வா முத்தம்மா போகலாம்" என்று முத்தம்மாள் சகிதம் அவ்விடத்தை விட்டுப் பிரிந்துபோயினார் சரஸ்வதிதாச சங்யாசி.

இன்னும் நான்கே சஞ்சிகைகளில் நாம் கதையை முடிக்க வேண்டியதிருக்கிறது. ஆகையால் சாவித்திரியின் விவாக தினத்திற்கு முன்னர் நடந்த சில சம்பவங்களை விவரியாது மேற்செல்லுவோம்.

அத்தியாயம் 7.

சாவித்திரியின் விவாக தினம். சூரியன் உதயமாயினான். சடகோபர் வீடு முழுவதும் மணக்கோல மயம். அக்கோலங்களை வர்ணிக்க இடமில்லையென்று விடுகிறோம். மணமகனாகிய விஜயரங்கதாசரை மாத்திரம் மணமணையிலிருத்திச் சில சடங்குகள் நிறைவேற்றியபின் மணமகன் தன் அறைக்குச் சென்றார். பின்பு பெண்ணைப் பீடத்திலிருத்திச் சில சடங்குகள் புரியவேண்டும். ஆனால் மணப்பெண்ணிருக்கும் அறையில் என்னவோ ஒரு சம்பவத்தினால் ஸ்திரீகள் கும்பல்கும்பலாய் அவ்வறைக்குட் புகுந்தார்கள். புருஷர்களிலும் பலர் புகுந்தார்கள். அவ்வறையில் நிகழ்ந்த விசேஷமென்னவென்றால், மணப்பெண்ணாகிய

சாவித்திரி மாலைமாலையாகக் கண்ணீர் வடித்துத் தேம்பித்தேம்பி யழுது கொண்டிருந்தாள். யார் என்னசொன்னபோதிலும் தான் அறையை விட்டு வெளியே வருவதில்லை என்று சாதித்தாள். "பெண்ணுக்குப் பேய் பிடித்துவிட்டது" என்றார் சிலர். பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதாலுண்டான பலன் இதுதான் என்றார் சிலர். "அவள் யௌவனமென்ன! விஜயரங்கதாசர் வயசென்ன! பாவம்! பாவம்!" என்றனர் சிலர். இவ்வாறு பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். இவ்விஷயங்களெல்லாம் விஜயரங்கதாசர் செவிகளுக்கெட்டின. அவர் உடனே சடகோபரை அழைத்து "இன்னும் ஐந்து நிமிஷத்தில் அவள் பந்தலில் வராவிட்டால் நான் 'ரெவால்வர்' எடுத்து என்னைச் சுட்டுக்கொள்வேன் என்று சாவித்திரிக்குச் சொல்லுங்கள்" என்று ஆத்திரத்தோடு சொன்னார். சடகோபரும் மருண்டு தன் புத்திரி யருகே வந்து மணமகன் சபதத்தைக் கூறி அவள் அறையை விட்டு வரும்படி அவளுக்குப் பல இதமான வார்த்தைகள் சொன்னார். ஐந்து நிமிஷமுமாயிற்று, பத்து நிமிஷமுமாயிற்று, பதினைந்து நிமிஷமுமாயிற்று, சாவித்திரி இருந்த விடத்தைவிட்டுச் சற்றும் நகரவில்லை. ஆனால் விஜயரங்கதாசர் தன்னைச் சுட்டுக்கொள்ளவில்லை. சடகோபருக்கு ஆத்திரம் பொங்கிவிட்டது. மணப்பெண்ணின் முதுகில் தன் கையால் ஓங்கி ஒரு அடி அடித்துவிட்டார். அவள் முன்னிலும் அதிகமாகத் தேம்பித் தேம்பி யழலாயினள். அருகேயிருந்த அவள் அன்னையும் கண்ணீர்வடித்துத் தேம்பலாயினள். இக் குழப்பத்திற்கிடையில் ஐந்து பெயர்கள் புதிதாய் மணவீட்டினுட் புகுந்தார்கள். புகவே புதிதாய் மற்றொரு குழப்பமும் உண்டாயிற்று.

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

தோடர்கள். (தொடர்ச்சி)

சில விநோதமான நம்பிக்கைகள்.

தோடர்கள் எதை வணங்குகிறார்கள் என்று சரியாய்ச் சொல்லுவது மிகவும் கஷ்டமானது. அது விஷயம் அவர்கள் பேசுவதேயில்லை. அவர்கள் பால்சாலையே அவர்களுடைய தேவாலயமாகக் காணப்படுகிறது. அது இருபாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்றில் பால்வேலையெல்லாம் செய்யப்படுகிறது. மற்றொன்றில் ஒரு விக்கிரகம் வைக்கப்பட்

டிருக்கிறது. ஒவ்வொரு குடிசையிலும் ஒரு விக்கிரகம் இருக்கும். தோடர்கள் சந்திரனையும், உதிக்கிற சூரியனையும், அஸ்தமிக்கிற சூரியனையும் ஒரேவிதமான செபத்தால் வாழ்த்துகிறார்கள். தன் குடும்பத்தாரால் சூழப்பட்டு, தலையின்மேல் கைவைத்து, நிலவுள்ள ஓர் இரவில் சந்திர பகவானை வணங்கிக்கொண்டிருக்கும் தோடனைப் பார்ப்பது விநோதமாயும் கவனிக்கத்தக்கதாயுமிருக்கும். அவர்களுக்கு ஜன்மாந்தரத்தில் நம்பிக்கை கிடையாது. ஒவ்வொரு காலையிலும் தோடன் எழுந்தவுடன் சூரியனை நமஸ்கரிக்கிறான். மரணத்துக்குப் பிறகு அவனுடைய ஆத்மா அவன் முன்னோர்கள் ஏராளமாகப் பாலும் வெண்ணெயும் அநுபவித்துக் கொண்டிருக்கிற 'எமனூர்' என்ற தேசத்திற்குப் போகிறதென்று சொல்லுகிறான். அவர்களுடைய பாஷை கொச்சையானது, கடினமானது, கன்னடத்தைப்போன்றது. அதற்கு லிபிகள் கிடையாது. தோடர்கள் சிறிது தமிழ் பேசுவார்கள். அவர்களுடைய குரல் மிருதுவாயிருக்கும். ஆனால் ஸ்திரீகளுடைய குரலோ, கிறிச்சென்றும் பிரியமற்றதாயு மிருக்கும்.

கலியாண வழக்கங்கள்.

ஒரே ஸ்திரீ பல புருஷர்களை விவாகம் செய்துகொள்ளும் வழக்கம் அவர்களிட மிருக்கிறது. அவர்கள் நிச்சிதார்த்தம் செய்யும்விதம் புதுமையானது. மணமகனின் தகப்பன் பெண்ணின் தகப்பனிடம் பெண்ணின் கிரயத்தைப்பற்றிப் பேச்சு நடத்திக்கொண்டிருப்பான். அவர்களிடம் பணம் அருமையானபடியால் பல எருமைகள் கொடுக்கப்படுகின்றன. வியாபாரம் முடிந்தவுடன் பெண்ணின் தகப்பன் மாப்பிள்ளையின் தலையில் தன் காலை வைத்துக்கொண்டு கலியாணத்துக்கு உறுதி வாக்குக் கொடுக்கிறான். உடனே மணமகன் ஒரு சீதனம் கொடுக்கவேண்டியது. ஆனால் நிச்சயமான பிறகும் மணமகனை விலக்கிவிடப் பெண்ணுக்கு அதிகாரம் உண்டு.

விநோதச் சாவுச் சடங்குகள்.

தோடர்களின் பழக்க வழக்கங்களில் சவச் சடங்குகள் அதிக விநோதமானவை. அவை பச்சைச் சடங்கு, உலர்ந்த சடங்கு என இரு வகைப்படும். பச்சைச் சடங்கு சாவு நேர்ந்தவுடனே செய்யப்படுகிறது. இறந்தவனின் குடும்பத்தாரும் சிநேகிதர்களும் பிணத்திற்குப் புது வஸ்திரமுடுத்திப் பாவத்தைச் சுத்தப்படுத்தும் பசுமையான புற்பூண்டுகளாலான பாடையில் வைத்துத் தூக்கிக்கொண்டுபோகிறார்கள். எல்லாரும் ஒரே குரலாய்ப் பாடுகிறார்கள். அழுகிறார்கள், சுடுகாடுபோய்ச் சேர்ந்த

வுடனே ஏராளமான தானியம், வெண்ணெய், பால் எல்லாருக்கும் கொடுக்கப்படுகின்றன. உயர்ந்த தூண்களின்மேல் காஷ்டம் அமைக்கப்படுகிறது. பிணத்தின்மேல் மரியாதையாய் மண் தெளித்து வணங்கிய பின் அதைக் காஷ்டத்தில் வைக்கிறார்கள். ஒரு சொந்தக்காரன் அதன் மயிரில் கொஞ்சம் கத்தரித்து 'உலர்ந்த' சடங்குக்காக வைத்துக்கொள்வான். பிறகு குடும்பத்தார் கட்டைகளின்மேல் தானியம் எறிந்து எண்ணெய் ஊற்றித் தீமூட்டுவார்கள். இப்போது கூட்டம் மெதுவாய்க் கலையும். சிலர் மாத்திரம் தங்கியிருந்து சாம்பலில் தேடி மண்டையோட்டை எடுத்து வஸ்திரத்தில் சுற்றி, இறந்த வருஷ தினத்தில் நடக்கப்போகும் 'உலர்ந்த' சடங்குக்காக, வீட்டுக்குக் கொண்டுபோவார்கள். ஐரோப்பியர்கள் கூட வேடிக்கை பார்க்க இந்தச் சடங்குகளுக்கு வருகிறார்கள். சரியாய் ஒரு வருஷத்திற்குப் பிறகு இறந்தவனின் மயிரையும் மண்டையோட்டையும் ஸ்திரீகள் குறிப்பிட்ட விடத்திற்குப் பாட்டுப் பாடிக்கொண்டு எடுத்துச் செல்லுகிறார்கள். கீழே அதை வைத்துத் துணியை விரிக்கிறார்கள். உடனே தோடர்களெல்லாம் அதற்கு மரியாதை செய்துவிட்டு, இறந்தவனுக்காக அழுகிறார்கள். பிறகு கை கோத்துக்கொண்டு அதைச் சுற்றி ஓர்வித மேள மடித்துக்கொண்டும் பாடிக்கொண்டும் கூத்தாடுகிறார்கள். பலாட்டியர்களான சிலர் எருமைகள் மேய்ந்துகொண்டிருக்கும் பள்ளத்தாக்குகளுக்குச் சென்று பலிக்காகச் சில நேர்த்தியான எருமைகளைக் கொண்டுவருகிறார்கள். அதி சந்தோஷ கோஷத்துடனும் கூச்சலுடனும் எருமைகள் ஒவ்வொன்றின் கழுத்திலும் ஒரு மணி கட்டியதுடன் மூர்க்கமாயும் கோபமாயும் மேற்குறித்த பட்டிபோன்ற விசாலமான இடத்திற்குள் துரத்தப்படுகின்றன. மறுபடியும் முன்போல் ஆடியபின் விருந்தினர்களுக்கெல்லாம் சோறும் நெய்யும் போடுகிறார்கள். தோடர்களின் ஆச்சரியமான தோற்றமும், பெருகிக்கொண்டிருக்கிற கூந்தலையுடைய மருண்ட பார்வையுள்ள ஸ்திரீகளின் தன்மையும், ஆட்டமும், பாட்டும், முரட்டுத்தனமான எருமைகளும் அவற்றின் கொடூரமான சண்டையும் உலகின் ஒப்பற்ற விநோதக் காட்சிகளில் ஒன்றென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அநேகர் எருமைகளுடன் தங்களாலான மட்டும் ஒருகை பார்க்கிறார்கள். உடனே தோடர்கள், ஸ்திரீகள், குழந்தைகள், மங்கைகள் இவர்களுடைய சௌக்கியத்துக்காகவும் துன்ப நிவர்த்திக்காகவும் சொந்தக்காரர் வேண்டிக்கொள்ளுகிறார்கள். அவ்வெருமைகளை 'இப்போது மண்டையோட்டுக் கருகில் கொண்டுவந்து அவற்றின் மூக்கிலிருந்து இரத்தத்தை வஸ்திரத்தின் மேல் தெளிக்கிறார்கள். உடனே இருவர் வந்து கைக் கோடாரியால் அக்

கோபமுண்ட மிருகங்களைக் கழுத்தில் வெட்டிக் கொல்லுகிறார்கள். வெட்டப்பட்ட தலையை விரித்திருக்கிற வஸ்திரத்தின்மேல் இழுத்துப் போடுகிறார்கள். பிறகு தோடர்கள் எதிருக்கெதிர் உட்கார்ந்து துக்கப் பட்டுக் கலைந்துபோய் விடுகிறார்கள்.

ஆர். பார்த்தசாரதி அய்யங்கார்,
கவர்ன்மெண்ட் பாடசாலை உபாத்தியாயர்,
புதுவை.

பிரகிருதி சாஸ்திரம்.

வஸ்து. — வஸ்து என்னும் மொழி ஒவ்வொருவருக்கும் தெளிவாக அர்த்தமாகக்கூடிய மொழியே. புஷ்பம், வீணை, புத்தகம், நாற்காலி, மண், ஜலம், வாயு, கடல் இவைகளெல்லாம் வஸ்துக்கள் என்று ஒவ்வொருவருக்கும் தெரியும். இந்த வஸ்துக்களில் வாயுவைத் தவிர மற்ற வஸ்துக்களை நாம் கண்ணாற் காணக்கூடும். வாயு நம் கண்களுக்குக் காணப்படவில்லை. ஆயினும் நாம் வாயு என்ற வஸ்து இருப்பதாக அறிவோம். ஏனென்றால், ஒரு புத்தகத்தாலேனும் ஒரு விசிறியாலேனும் நம்மை விசிறிக்கொண்டால், நாம் கண்ணாற் காண்கின்ற வஸ்துக்களாகிய புஷ்பம், வீணை, நாற்காலி முதலியவைகள் தேகத்திற் பட்டு உராய்வதை நாம் உணர்வதுபோல் என்னவோ ஒன்று நம் தேகத்திற் பட்டு உராய்ந்து போவதை உணருகிறோம். அவ்வாறு உணர்வதால் நமது தேகத்தில் பட்டு உராய்ந்து செல்லும் ஒரு வஸ்து நம்மைச் சுற்றி இருப்பதாக அறிந்து அந்த வஸ்துவை வாயு என்றழைக்கிறோம்.

சில நண்பர்கள் ஓரறையில் உல்லாசமாய்ச் சம்பாஷித்துக்கொண்டிருக்கும்பொழுது புதிதாய் அவ்வறைக்குள் ‘ரமணன்’ என்ற மற்றொரு நண்பன் புகவே முன்னமே அறையிலிருந்தவர்களி லொருவனாகிய ‘கண்ணன்’ என்பான் ரமணனை நோக்கி “மல்லிகைப்பூ வாசனை வீசுகிறதே! உன் காதலி சூட்டினாளோ” என்று ரமணன் கூந்தலில் மறைத்துச் சூட்டப்பெற்றிருந்த மல்லிகைப் புஷ்பத்தை எடுத்து மற்ற நண்பர்களுக்குக் காட்டிப் பரிகசிக்கின்றான். ரமணன், “கண்ணா! உன் சாமர்த்தியத்திற்கு நான் ஒன்று தருகிறேன், கண்ணை மூடிக்கொண்டு வாயைத்திற” என்கின்றான். கண்ணனும் அவ்வாறே செய்யவே ரமணன் அவன் வாயில் என்னவோ ஒன்றைப்போட, கண்ணன், “ஓகோ! உன் காதலி கொடுத்த கற்கண்டோ” எனப் புன்னகையுடன் கூறித் தன் வாயிலுள்ள கற்கண்டைத் தின்னுகிறான். நண்பர்களனைவரும் சற்றுநேரம் பேசிக்

513

கொண்டிருக்கும் பொழுதே "டடங் டங்டங், டடடங் டங்டங், டடடங் டங்டங்—" என்றவாறு ஒலித்த ஒலி அவர்கள் செவிகளிற் புகவே, கண்ணன் "மாதாக்கோயில் மணி அடிக்கின்றது. மணி பன்னிரண்டாய்விட்டது. நான் வீட்டுக்குப் போகவேண்டும்" என்கின்றான். இச் சம்பவங்களிலிருந்து பின்வரும் விஷயங்கள் தெளிவாகின்றன. முதலில் கண்ணன் மல்லிகைப்பூவைக் கண்ணுற் காணுதிருந்தபோதிலும் தன் வாசனை யுணர்ச்சியினல் மல்லிகைப்பூ என்ற வஸ்து புதிதாய் அறையில் வந்திருப்பதாக அறிந்தான். அவன் கற்கண்டைக் காணுதிருந்தபோதிலும் சுவை யுணர்ச்சியினல், தன் வாயிலிருப்பது கற்கண்டென்று அறிந்தான். மாதாக்கோயில் மணியை அவன் காணுதிருந்தபோதிலும், ஒலித்த ஒலிக்குக் காரணம் மாதாக்கோயில் மணி என்ற வஸ்து என்று சப்த உணர்ச்சியால் அறிந்துகொண்டான்.

இவ்வளவு விஷயங்களிலிருந்து நாம் என்ன அறிந்துகொள்ளுகின்றோம்? வஸ்துக்கள், ரூபம், ஸ்பரிசம், கந்தம், ரசம், சப்தம், (காணல், தொடுதல், மணம், சுவை, ஒலி ஆகிய ஐந்து புலன்கள் அல்லது உணர்ச்சிகளில் ஒன்றினுலேனும் பலவற்றினுலேனும் அறியப்படுவன என்றறிகின்றோம். ஆகையால் ஐம்புலன்கள் ஒன்றினுலேனும் பலவற்றினுலேனும் அறியப்படுவதுதான் வஸ்து எனப்படும்.

வஸ்துவல்லாதன. ஐம்புலன்களால் அறியப்படுவன வஸ்துக்கள் என்றமையால், வெண்மை, கருமை, சூடு, தித்திப்பு, நாற்றம், இரைச்சல் முதலியவைகளில் வெண்மையும் கருமையும் காணப்படுவனவாயும், சூடு ஸ்பரிசிக்கப்படுவதாயும், தித்திப்பு சுவைக்கப்படுவதாயும், நாற்றம் முகரப்படுவதாயும், இரைச்சல் கேட்கப்படுவதாயு மிருப்பதால் வெண்மையும், கருமையும், சூடும், தித்திப்பும், நாற்றமும், இரைச்சலும் வஸ்துக்கள் என்று சிலர் எண்ணக்கூடும். அது நியாயமன்று. ஏனென்றால், சற்றுக் கூர்ந்து யோசித்தால் வெண்மையும் கருமையுமுடைய பொருள்கள்தான் காணப்படுவனவன்றி வெண்மையும் கருமையும் காணப்படுவனவல்ல வென்பது தெளிவாகும். காணப்படும் பொருள்களைக் காணும் காட்சி யுணர்ச்சி இருக்கிறதே அந்த உணர்ச்சியின் பேதங்களுக்குத்தான் வெண்மை கருமை என்று பெயர். அவ்வாறே சூடும், தித்திப்பும், நாற்றமும், இரைச்சலும், முறையே ஸ்பரிச, ரச, கந்த, சப்த உணர்ச்சிகளே யன்றி உணரப்படுவனவாகா. ஆகையால் இவையெலாம் வஸ்துக்களாகா.

அறிவு, மனம், உயிர் ஆகிய இவைகளையும் இவைபோன்றவைகளையும் நாம் அடிக்கடி வஸ்துக்கள் என்று வழங்குகிறோம். என்றாலும் புஷ்பம், வீணை, கல், ஜலம் முதலியவைகளிலிருந்து அறிவு, மனம்,

உயிர் முதலியவைகளை வேறாகப் பிரித்து, புஷ்பம் முதலியவை ஸ்தூல வஸ்துக்கள் என்றும், மனம் முதலியவை சூக்ஷ்ம வஸ்துக்கள் என்றும் நாம் வழங்குவதுண்டு. ஆனால் நாம் இந்த நூலில் வஸ்து என்பது ஐம் புலன்களால் அறியப்படும் ஸ்தூல வஸ்துக்களையே யன்றி, ஐம்புலன்களால் அறியப்படாதவைகளை வஸ்து என்றழைப்பதேயில்லை. ஆகையால் நமது நூலின் பிரகாரம் மனம் முதலியன வஸ்துக்களன்று.

நிழலும் கண்ணாடியிற் காணப்படும் பிரதிபிம்பமும் காணப்படுவதேயாயினும் அவை வஸ்துக்களன்று. இதற்குக் காரணம் அடுத்த பாடத்தில் வஸ்துக்களின் லக்ஷணங்களைப்பற்றிக் கூறும்பொழுது தெளிவாக விளக்கப்படும்.

பிரகிருதி சாஸ்திரம். — 'பிரகிருதி' என்ற மொழியை நமது வைதிக சாஸ்திரங்களில் என்ன அர்த்தத்தில் உபயோகித்திருந்தபோதிலும் இந்த இலௌகிக நூலில் "பிரபஞ்ச இயற்கை" என்ற அர்த்தத்திலேயே நாம் உபயோகிக்கிறோம். ஆகையால் பிரபஞ்ச இயற்கையைப்பற்றிக் கூறும் நூல் பிரகிருதி சாஸ்திரம். ஆனால் மனிதர் சஞ்சலமுறுவதும், மகிழ்ச்சியுறுவதும், ஒருவருக்கொருவர் நன்மைபுரிவதும், தீங்கிழைப்பதும், நாய் குரைப்பதும், புலி முதலிய பிராணிகள் மாம்ச பக்ஷணிகளாயிருப்பதும், யானை முதலிய பிராணிகள் சாக பக்ஷணிகளாயிருப்பதும், பறவைகள் கூடுகட்டுவதும், நாம் இவைகளையெல்லாம் எழுதுவதும், இவைபோல்வனவும் பிரபஞ்ச இயற்கையேயாயினும், இவைகளெல்லாம் உயிருள்ள மனிதர்களும் மற்றப் பிராணிகளுமாகிய ஜீவர்களின் மனத்தில் எழும் சலனங்களால் விளைவனவாகையால், இவை ஜீவர்களுக்கே விசேஷமா யமைந்த இயற்கை. பிரபஞ்ச இயற்கை என்று நாம் கூறியதில் இந்த ஜீவ இயற்கையை உட்படுத்தவில்லை. உலகம் முழுவதும் வஸ்துக்கள் நிறைந்திருப்பது, மழைபொழிவது, காற்றடிப்பது, ஆற்றில் ஜலம் ஓடுவது, குளத்தில் ஜலம் வற்றுவது, நெருப்புக்குச்சியிலிருந்து உஷ்ணமும் ஒளியும் உண்டாவது, ஈர வேஷ்டி உலர்வது, விரைவாய்ச்செல்லும் சைக்கில் வண்டி கல் தடுக்கிக் கீழே விழுவது, வீடு இடிந்துவிழுவது, இலவம்பஞ்சு காற்றில் பறப்பது, மரம் ஜலத்தில் மிதப்பது, கல் ஜலத்தில் அமிழ்வது, கற்கண்டு ஜலத்தில் கரைவது, கல் கரையாமலிருப்பது, மண்பாண்டம் எளிதில் உடைந்துவிடுவது, பொன் பாண்டம் எளிதில் உடையாமலிருப்பது, கர்ப்பூரம் எரிந்து மறைவது ஆகிய இவைகளும் இவைபோல்வனவுமே பிரபஞ்ச இயற்கை என்னும் பிரகிருதி என்கின்றோம். ஆகையால் வஸ்துக்களைப்பற்றியும் அவையிருக்கும் ஸ்திதி, அவைகளின் லக்ஷணங்கள், அவை அடையும் சலனங்

515

கள் அல்லது மாறுபாடு இவைகளைப்பற்றியும் நுட்பமாய் ஆராயும் நூலே பிரகிருதி சாஸ்திரம். ஆனால், வஸ்துக்களைப்பற்றி ஆராய்வதில், வஸ்துக்களில் எவ்வளவு பேதங்களிருக்கின்றன? உலகத்திலிருக்கும் ஒவ்வொரு வஸ்துவும் கலப்பற்ற தனி வஸ்துவா? அல்லது பல வஸ்துக்களாலாகிய கலப்பு வஸ்துவா? கலப்பு வஸ்துவாயின், அதில் என்னென்ன வஸ்துக்கள் கலந்திருக்கின்றன? என்றவாறு வஸ்துக்களின் பேதங்களையும் ஆக்கம் அல்லது அமைப்பையும் அறிவுடையோர் ஆராய்ந்த ஆராய்ச்சி மிக விரிவாக வளர்ந்து ஒரு பெரிய நூலாகவே அந்த நூல் "ரசாயன சாஸ்திரம்" என்ற ஒரு தனிப் பெயருடையதாயிற்று. ரசாயனம் என்பதற்குச் செம்பு வெள்ளி முதலிய லோகங்களைப் பொன்னாக்கும் வித்தை என்றர்த்தமென்று நமது ஜனங்கள் சாதாரணமாய் அறிவார்கள். ஆதியில் சாதாரணப் பொருள்களிருந்து பொன் செய்ய முயற்சித்ததிலிருந்தே வஸ்துக்களின் பேதங்களையும் ஆக்கத்தையும் விவரிக்கும் பல அரிய விஷயங்கள் அறியப்பெற்று அவை ஒரு முக்கிய நூலா யமைந்தன. பொன்னை எளிதாகவும் ஏராளமாகவும் செய்ய இயலாமற்போனாலும், அவ்வாறு செய்ய முயன்றதிலிருந்து அறிந்த பல அரிய விஷயங்கள்தான் அம் முயற்சிகளிலிருந்து அகப்பட்ட பொன் எனக் கருதி அவ்விஷயங்களைப் பொன் போற் போற்றி ஒரு நூலாக அறிஞர்கள் அமைக்க, அந்நூலின் உற்பத்திக்குக் காரணமாகிய முயற்சியின் பெயராகிய ரசாயனம் என்பதே அந்த நூலுக்குப் பெயராயிற்று.

ரசாயன சாஸ்திரம், பிரகிருதி சாஸ்திரத்தில் ஒரு பாகம். ஆனால் அது ஒரு பெரிய முக்கிய நூலா யமைந்து தனிப் பெயர் பெற்றிருப்பதால், பிரகிருதி சாஸ்திரத்தில் ரசாயன சாஸ்திர மொழிந்த மற்றப் பாகத்திற்கே சாதாரணமாக இப்பொழுது பிரகிருதி சாஸ்திரம் என்று வழங்கப்படுகிறது. ஆகையால் வஸ்துக்களின் லக்ஷணங்கள், அவையிருக்கும் ஸ்திதி, அவை அடையும் சலனங்கள் அல்லது மாறுபாடுகள் ஆகிய இவைகளைப்பற்றி ஆராயும் நூலையே பிரக்ருதி சாஸ்திரம் என்ற பெயருடன் எழுதுகின்றோம்.

(தொடரும்.)

பாரதி பக்தன்.

நமக்கு வேண்டியவர் யார்?

இவ்வுலகத்தில் நமக்கு உண்மையில் வேண்டியவர் யாவர்? என்று சற்று விசாரிப்போம். எவர் நமக்கு இனிமை செய்கின்றனரோ அவரே

நமக்கு வேண்டியவராவர். ஒவ்வொருவருக்கும் நட்பினர், பகைவர், நொதுமலர் (பகையும் உறவுமின்றிய அயலோர்) என முத்திறப்பட்ட மனிதர்களுண்டு. இவர்களில் நட்பினரே பெரும்பான்மையும் நாம் சுகமடையக் கோருகின்றவர். ஆகையால் அவர்களே நமக்கு வேண்டியவர். மற்றைய நொதுமலரைப்பற்றி நமக்குச் சுகமும் துக்கமுமில்லை. பகைவரைப் பற்றித் துக்கமுண்டு. ஆதலின் இவ்விரு பகுதியாருமே நமக்கு வேண்டாதவர்கள் என்று பலரும் அபிப்பிராயப்படுகின்றனர். அப்படி நினைக்கின்ற அவர்கட்கே ஒவ்வொரு சமயத்தில், நட்பினர் பகைவராகவும், பகைவர் நட்பினராகவும், நொதுமலரே நட்பினராகவும் பகைவராகவும் இருப்பதை நேரிற் காண்கின்றோம். ஆகையால் ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொருவரும் வேண்டியவராகின்றனர். இது யாவரும் வேண்டியாதற்குரிய காரணம் தங்களிடம் உள்ளபோது உண்டாவது. அப்போது வேண்டாரென்று நீக்கத்தக்கா ரொருவருமிலர். யாவரும் வேண்டாராதற்குரிய காரணம் தம்மிடம் உள்ளபோது தங்களுக்கு வேண்டியவர் ஒருவருமிலர்.

இனி மற்றவர்களைவிட மனைவி மக்கள் முதலிய குடும்பத்தார் தாம் மிக வேண்டியவர்கள்; அவர்களே தங்களுடைய லாப நஷ்டங்களை உடனிருந் தனுபவிக்கின்றனர்; ஆகையால், அவர்களைவிடத் தங்கட்கு வேண்டியவர்கள் வேறொருவரும் இல்லையென்னில், அம்மனைவி மக்கள் முதலியோரும் நல்வினைப் பயனை யனுபவிக்குங்கால் வேண்டியவராய் இனிமை செய்பவர்போல் இருந்து, தீவினைப் பயனை யனுபவிக்குஞான்று தீயவராக இருந்து தீமை செய்யக் காண்கின்றோம். யாங்ஙனமெனில், ஒருவன் புண்ணிய வசத்தால், செல்வமெய்திச் செல்வாக்கோடு அதிகாரஞ் செய்துகொண்டிருந்தனன். அப்போது அவன் மனைவி, "பெண்டிர்க் கழகெதிர் பேசாதிருத்தல்" என்றபடி கணவனுக்கு மிக அடங்கி, இன்னும் கற்பிலக்கணங் கடவாளாய், அவனைத் தெய்வமாகவே பூசித்து வந்தாள். மக்களும், "தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்றபடி அவன் வாக்கைக் கடவுள் வாக்காகவே கருதி நடந்துவந்தனர். பிறருந் தங்கள் தங்களுக்குத் தக்கபடி மரியாதை செய்துவந்தனர். இப்படி இருந்த அவன், சிலநாளில் வறியனாய், செல்வாக்கற்று, அதிகாரமிழந்திருக்கும் சமயத்தில், அவன் மனைவி மக்களே அவனை அரைக்காசுக்கும் மதியாமல், அவமதித்து நடந்தார்கள். பின்னுஞ் சிலநாளில் அம் மனிதனுக்குப் பலத்த நோயொன்று வந்து பலநாள் கஷ்டப்படவே, "ஆ ஆ இவனொருவன் நன்றாய்ப் படுத்துக்கொண்டு எங்கள் இடுப்பை ஒடிக்கிறான்; இதைவிட இவன் செத்தாலும் ஒருநாளைக்குத் தலைமுழுகிவிட்டுப் போகலாம்; இவனால் என்ன சுகங்கண்டோம்" என்றிப்படி வாயில் வந்தபடியெல்லாஞ்

சொல்லி நிந்தித்தார்கள். உலகத்தில் இந்த வழக்கம் பெரும்பாலார்க்குண்டு. சிறுபான்மை உத்தமர்களான மனைவி மக்கள் முதலியோர் மேற்கூறியபடி ஒருவனுக்குத் தாழ்வு வந்த தருணத்தில், வெளிப்படையாக நிந்திக்காவிட்டாலும், மனசிலேனும் மேற்சொன்னபடி நினைக்காமலிரார்கள்.

இங்ஙனம் நோய் முதலியன இன்றி வாழினும், பற் கழன்று, உரை குழறி, பனைபோல் உடல் திரைந்து, பண்ணைப் பூப்போல் பங்கி நரைத்து, குனிந்து குனிந்து நடை தள்ளாடி, கோழை ஒழுக இருமிக்கொண்டிருக்கும் கொடிய விருத்தாப்பிய காலத்தில், கண்டவர்களெல்லாம் நகைத் திகழ்வதே யல்லாமல், நம்மவர்களாகிய பெண்டிர், மக்கள், சுற்றங்களே நம்மைக் கண்டு நகைத்து இகழ்ச்சிபுரியா நிற்பர்கள். ஆகையால், நாம் அக்கொடிய விருத்தாப்பியம் வருவதற்கு முன்னரே, வாசனை வீசுகின்ற திருவெண்ணீற் றினையுடைய நமது சிவபெருமானை யடைந்துய்வோம் என்ற திருவுள்ளக் கிடைதோன்ற,

"உரையும் பாட்டுந் தளர்வெய்தி யுடம்பு மூத்த போதின்கண்
நரையுந் திரையுங் கண்டெள்கி நகுவர் நமர்க ளாதலால்
வரைகொள் பெண்ணை வந்துலா வயல்கள் சூழ்ந்த கோவலூர்
விரைகொள் சேர்வெண் ணீற்றினன் வீரட் டானஞ் சேர்துமே."

என்ற பாசுரத்தில், நமது திருஞான சம்பந்தப் பெருந்தகை திருவாய் மலர்ந்தருளிய அருமையை ஒவ்வொருவரும் கவனிப்பாராக.

உலகத்தில் ஒருவருக் கொருவர் நல்வினை காரணமாகவேண்டியவரும், தீவினை காரணமாகவேண்டாதவரு மாகின்றனரேயன்றி, இயற்கையாக ஒருவர்க் கொருவர் வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாத நொதுமலாளரேயாம். எந்தக்காலத்தும், எல்லாவிடத்திலும், எப்படிப் பட்டவனும், "தான் சாவ மருந்துண்பாருண்டா"! என்ற பழமொழிப்படி தனக்குத்தான் துன்பஞ் செய்துகொள்ளமாட்டான். இன்பமே தேடுவன். ஆகையால், தனக்கு வேண்டியவன் தானேயன்றி, வேறொருவரில்லை. தமக்கு வேண்டியவர் தாமேயாயிருக்கவும், தாங்கமுடியாத துக்கம் வந்தபோது, தம்மைத் தாமே வெறுத்துப் பலர் துக்கமடைகின்றனர். சிலர் கடவுளிடம் முறையிடுகின்றனர்.

அதிக துக்கம் வந்தபோது அவற்றைப் போக்க, அல்லது "தாந்தா முன் செய்த வினை தாமே யனுபவிப்பார்" என்ற உறுதி மொழியை யுய்த்துணர்ந்து, அத் துக்கத்தைப் பொறுத்திருக்க, தம்மால் முடியா

விட்டால், அதுபற்றித் தம்மைத் தாமே வெறுத்துத் துக்கப்படுபவர்கள் மூடரே. அறிவுள்ளோர் அத் துன்பத்தை நீக்கிவிட, அல்லது பொறுத்திருக்கத் தம்மால் முடியாவிட்டால், பரமேசுரரிடம் குறையிரந்து வேண்டுவர். அப்பெருமானும் தனது பரம கருணையால், சீவர்களுக்கு இரண்டிலொன்று அருள்புரிவர். இக் காரணம்பற்றியே சிவபெருமான், ஒவ்வொருவருக்கும் இன்றியமையாது வேண்டியவராகின்றனர். ஒருவன் நல்வினை யனுபவிக்கும்போதும், தீவினை யனுபவிக்கும்போதும், அவனிடம் விருப்பு, வெறுப்பின்றி யிருந்து, அதிக கஷ்டமடைகின்றவன் அக் கஷ்டந் தாங்காமல் சர்வ வல்லவனாகிய தன்னிடம் சரண்புக்கால், வேறு பயன் கருதாது, தனது பெருங் கருணையே காரணமாக, அந்தச் சீவனுக்கு அவனிஷ்டப்படி, இன்னலகன்று இன்பமெய்த அனுக்கிரகிக்கின்ற எமது பெருமானாகிய ஈசுரனே யாருக்குந் தம்மினும் வேண்டியவர். இதுபற்றி யன்றோ, நமது திருநாவுக்கரசு சுவாமிகளும், "என்னிலாரு மெனக்கினி யாரில்லை—என்னி லும்மினி யாளொரு வன்னுளன்—என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்—கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே" என்றருளிச் செய்தனர்.

குருடனுக்குக் குருடன் வழிகாட்டான்; நோய்கொண்ட ஒருவன் மற்றவன் நோய்தீர்க்கான். பசிகொண்டவன் பிறன் பசி நீக்கான். அதுபோல், கஷ்டப்படுகின்ற ஒரு சீவனுக்குக் கஷ்டப்படுகின்ற மற்றொரு சீவன் எவ்வாற்றானும் இனிமை செய்ய இயலாது. ஆகையால், சதா துக்கமடைகின்ற ஜீவர்களாகிய நமக்கு, சதா ஆனந்தமடைகின்றவரும், சர்வ வல்லமை உள்ளவரும், பெருங் கருணைத் தடங் கடலுமாகிய நமது சிவபெருமானே எல்லாரினும், எவ்விடத்தும், எப்போதும் உண்மையாக வேண்டியவர். ஆகையால், நாமெல்லாம் அக்கடவுளிடம் உன்பற்றொழிய ஒரு பற்றுமில்லை யுடையவனே என்று மனமுருகி, ஒழுகு முறை யறிந்தொழுகி அவர் அருள் பெறுவேமாக. சுபம்.

துரைசாமிமுதலியார்,
கவர்ன்மெண்ட் பாடசாலைத் தமிழ்ப் பண்டிதர்,
பாகூர்.

519

இலக்கியப் பகுதி.

சீவக சிந்தாமணி.

(க. நாமகளிலம்பகம்.)

(தொடர்ச்சி.)

இப்பால் மயானத்திருந்த விசயையை, தோழி வடிவங்கொண்டு வந்த தெய்வம், மகனுக்கு இனி நோவிருக்கும் ஆக்கத்தைக்கூறி ஒருவாறு தேற்றி, "பகைவனிடமாகிய இதில் நாமிருத்தல் கூடாது; தலைவனை யிழந்தவர் தவஞ்செய்தலே தகுதியுடைத்து; ஆதலின் நீ தவமியற்றுக" என்று கூற, விசயை அதற்கொருப்பட்டு, அத் தெய்வத்தி னுதவியால், மேகத்தினிடையே காணப்படும் மின்னேபோல, அங்கள்ளிரவிலே புறப் பட்டுக் காடுகளையு மலைகளையுங் கடந்து தண்டகாரணியம் சேர்ந்து அங்குள்ள தாபதப்பள்ளியை யடைந்து தவம்புரியத் தலைப்பட்டனள். அப்போது தோழியாகிய தெய்வம், மாதவப் பெண்களிடத்து, "இவள் உங்களடைக்கலம்" என்று விசயையை ஒப்புவித்து, "இராசமாபுரம் சென்று மகன் வளரும் செய்தியை யறிந்துவருவேன்" என்று கூறி விசயையிடம் விடைபெற்றுச் சென்று இராசமாபுரத்தைச் சார்ந்த தன் னுறைவிடமாகிய புறங்காட்டை யடைந்தது.

பின்னர்த் தவமியற்றத் தலைப்பட்ட விசயை, "இவை தவக்கோ லத்திற்குத் தக்கவையல்ல" எனக் கருதி, தலைக்கோலத்தையும் காதணி களையும் கழுத்தணிகளையும் தோளணிகளையும் கையணிகளையும் காலணி கள் முதலியவற்றையும் கழற்றினள்.

12. பூப்பெய் செம்பொற் கோடிகமும் பொன்னு ரால வட்டமு
மாக்கு மணிசெய் தேர்த்தட்டு மரவின் பையு மடுமேல்குல்
வீக்கி மின்னுங் கலையெல்லாம் வேந்தன் போகி யரம்பையரை
நோக்கி நும்மை நோக்கானீர் நோவா தொழிமி னெனத்துறந்தான்.

---

12. தேவி, வேந்தன்போய் அரம்பையரை நுகர்தலாலே நும்மை நோக்கானுதலால் நீர் என்னை வெறுதே நீங்குவீராகவென்று சொல்லி, பூந்தட்டையும் ஆலவட்டத்தையும் தேர்த்தட்டையும் பாம்புப்படத்தையும் வெல்லுகின்ற அல்குலிலே வீக்கி மின்னுகின்ற கலைகளெல்லாவற்றையுந் துறந்தாளென்க.

நோக்கியென்றார், மெய்யுறு புணர்ச்சியின்றி நோக்கால் நுகர் தலின். நும்மை நோக்கான் — நும்மாலுள்ள பயனை நோக்கான்.

520

தவத்திற்கேற்ற காவியுடை யணிந்து மகனுக்கங் கருதித் தவம் புரிகின்றவள், மகன் வளரும் செயலை யறிதற்குத் தோழி வரும் வழியைப் பார்த்தவண்ணமா யிருந்தனள். இஃதிங்ஙனமாக,

இராசமாபுரத்தே, கந்துக்கடனும் அவன் மனைவி சுநந்தையும் பெருமகிழ்ச்சியுற்று, எற்போர் வெறுப்ப இருநிதி வழங்கிச் சீவகனை யன்போடு வளர்த்துவரலாயினர்.

13. மேகம் மீன்ற மின்னனை யாடன் மிளிர்பைம்பூ
ணாகம் மீன்ற வம்முலை யின்பா லமிர்தேந்தப்
போகம் மீன்ற புண்ணிய னெய்த கணையேபோல்
மாகம் மீன்ற மாமதி யன்னான் வளர்கின்றான்.

இங்ஙனம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவந்த சீவகன், உரிய பருவத்திலே கல்விப் பயிற்சி செய்விக்கப் பெற்று, கந்துக்கடன் கட்டளையின்படி அச்சணந்தியாசிரியர்பால் வில் வித்தை முதலியவற்றை யெளிதிற் பயின்று எல்லாக் கலைகளினும் இணையற்றவனாய் விளங்கினான். சீவகனது அறிவு முதிர்ச்சியைக் கண்டு ஆசிரியர் பெருவியப்புற்று, அவனுக்கு முன்னர் அறவுரை கூறுவா ராயினர்.

14. அறிவினாற் பெரிய நீரா ருவினை கழிய நின்ற
நெறியினைக் குறுகி யின்ப நிறைகட லகத்து நின்றார்
பொறியெனும் பெயரா வைவாய்ப் பொங்கழ லரவின் கண்ணே
வெறிபுலங் கன்றி நின்றார் வேதனைக் கடலு ணின்றார்.

---

13. மதியன்னான் (சீவகன்) மின்னனையாள் (சுநந்தை) தன் ஆக மீன்ற முலை இனிய பாலமுதத்தை யேந்த, சிவன் எய்த (திருமாலாகிய) கணை நந்தகோன் மகனாய் வளருமாறுபோலக் கந்துகன் மகனாய் வளர் கின்றானென்க.

முலை – எழுவாய். போகமீன்ற – தான் சத்தியும் சிவனுமாய் உலகத்துக்கெல்லாம் போகத்தை யுண்டாக்கின. புண்ணியனென்றார், திரிபுரத்தை யழித்தும் நஞ்சுண்டும் பல்லுயிர்களையுங் காத்தலின். எய்த கணை – திருமால். கணை வளருமாறுபோல வளருமெனவே, அவன் ஆய்ப்பாடியிலே நந்தகோன் மனையிலே மறைய வளர்ந்தது உவமையாம். மதி – பிறை.

14. அறிவினாற் பெரியோர் நன்னெறியிற் சென்று இன்பக் கடலகத்தே நின்றார்; வேட்கையாகிய நஞ்சையுடைய உடம்பென்னும் பாம்பிடத்தில் பொறியென்னும் பெயரையுடைய வாகிய ஐந்து வாயி.

521

15. கூற்றுவன் கொடிய னாகிக் கொலைத்தொழிற் கருவி சூழ்ந்த
மாற்றரும் வலையை வைத்தான் வைத்ததை யறிந்த நாமும்
நோற்றவன் வலையை நீங்கி நுகர்ச்சியி லுலக நோக்கி
யாற்றுறப் போத றேற்று மளியமோ பெரிய மேகாண்.

16. பேரஞ ரிடும்பை யெல்லாம் பிளந்திடும் பிறப்பு நீக்கு
மாரமர் தரிதிற் பெற்று மதன்பயன் கோட றேற்று
மோருமைம் பொறியு மோம்பி யுளபகல் கழிந்த பின்றைக்
கூற்றெரி கவரும் போழ்திற் கூடுமோ குறித்த வெல்லாம்.

இங்ஙனம் அறநெறி கூறிய ஆசிரியர் ஒரு நாள் சீவகனைத் தனியே யழைத்துச் சென்று தாம் ஓரிருக்கையிலிருந்து அவனை நோக்கி, "சச்சந்தனென்னும் அரசன் கருமுதிர்ந்த வயிற்றினளாகிய தன் மனைவி விசயையை மயிற் பொறிமேற் போக்கிப் பின்னர்த் தான் கட்டியங்கார னென்னும் அமைச்சனாற் கொல்லப்பட்டான்; அவ்விசயை ஓர் மயானத் திடை ஓராண் மகவைப் பெற்றனள்; அக் குழந்தையைக் கந்துக்கடன் எடுத்து வந்து தன் மனைவி கையிற் கொடுக்க, அவள் அதனை யன்போடு வளர்த்துவரலானாள்" என்று ஓர் கதைமுகத்தாலே, கண்ணன் கன்ன னுக்குப் பிறப்புணர்த்தியவாறு கூறினன். அது கேட்ட சீவகன், "அப் பிள்ளையாவன்?" என, "நீதான்" என்று ஆசிரியர் அறைதலும், சீவகன்

னிடத்தே களிப்பைச் செய்கின்ற விடயங்களிலே அடிபட்டு நின்றவர் துன்பக் கடலிலே நின்றாரென்க.

தீவினை கழிய நின்ற நெறி — சன்மார்க்கம். இன்ப நிறை கடல் — அநந்த சுகம்.

15. கூற்றுவன் கொடியனாய்க் கொலைத் தொழிற் கருவியைச் சூழ்ந்து வலையை வீசி வைத்தான்; அதனை யறியத்தக்க நாமும் அறிந்து தவம் செய்து தப்பி வீட்டை நோக்கி வழிப்படப் போதலைத் தெளிகிலேம்; பெரியேங்காணென்க.

கருவி — ஐயும் பித்தும் வளியுமாகியவார்கள். வலை — ஆயுக் கன்மம். நுகர்ச்சியில் உலகம் — இதற்கு முன் னனுபவியாத வுலகம்; வீடு. ஓ பெரியம் — இகழ்ச்சி.

16. இடும்பையெல்லா நீக்குதற்குக் காரணமான பிறப்பறுக்கு மக்கள் யாக்கையைத் தவப்பயனாற் பெற்றும்; பெற்றுவைத்தும் அதன் பயனைக்கொள்ள அறிகின்றிலேம்; ஐம்பொறிகளையும் ஐம்புலன்களாலே பேணி உள்ள நாள் சென்றால் எரிகவரும்பொழுது நினைத்த அறமெல்லாம் செய்யக்கூடுமோ ஓர்ந்துபாருமென்க.

பதைபதைத்துத் துடித்து மூச்சற்றவனாய், ஆசிரியர் தெளிவிக்கத்தேறி, கட்டியங்காரனைக் கொல்லுதற் பொருட்டுப் போர்க்காயத்தனாய்ப் புறப் பட்டான்.

அது கண்டு ஆசிரியர் அவனைத் தடுத்து, "மைந்த! இதுகால மன்று, இன்னும் உனக்கு ஒரு யாண்டு கழிதல்வேண்டும், அதுகாறும் நின்னை வெளிப்படுத்தாதொழிக, இது எனது வேண்டுகோள்" என்ன, சீவகன் ஆசிரியர் கட்டளையை மறுத்தற்கஞ்சி அவ்வாறே யுடம்பட்டான்.

பின்னர் அச்சணந்தி யாசிரியர் அவனுக்குத் தம் வரலாறு கூறு வாராய், "யான் முன்னம் வெள்ளி மலையிலுள்ள வாரணாசியென்னும் நகரிற் கரசன்; உலோகமாபாலன் என்னும் பெயருடையேன்; என் மகனுக் கரசளித்துக் காட்டிற் சென்று தவம்புரியத் தொடங்கின யான் முற்பிறப்பின் தீவினையால் யானைத்தீ யென்னும் நோய்கோட்பட்டு வருந்தி யெவற்றானுந் தீரப்பெற்றிலேனாய் இங்கு வந்து நின்னைக் கண்ட வளவில் அந்நோய் தீரப்பெற்றேனாதலின், நின்பால் பெரு விருப்புற்று நினக்குக் கல்வி யறிவுறுத்தற்கே யின்றளவு மிருந்தேன்; என்னெண்ண மும் ஈடேறியது; இனி யான் சென்று தவஞ்செய்தற்கு எண்ணுகின் றேன்; விடைகொடு" என்றனர். சீவகன் அவரைப் பிரிய மனமில்லாத வனாயினும் தவத்திற்குச் செல்வதைத் தடுத்தல் கூடாதென நினைத்து அவ் வாறே விடைகொடுத்தனுப்பித் தான் இராசமாபுரத்திலே யிருந்தனன்.

இது நாமகளைக் கூடின இலம்பகமென்க.

(வரும்.)

பத்திராதிபர்.

நூல்நயந்தெரித்தல்.

சாணக்கிய சூத்திரம்.

(முற்றொடர்ச்சி.) புறக்காப்புகள்.

தருபா வணக்கம்.

ஏவன் பொன்னமா டரங்கினின் றெழினடம் புரிவோன்
ஏவ னைந்தொழி லினிதுற வியற்றுவோ னென்றும்
ஏவ னெண்வடி வாகினோ னீங்கெமக் களிவந்
தேவ னாண்டுகொண் டவனவ னிணையடி பணிவாம்.

முருகன்துதி.

சத்தி யைந்துங் குடிலையுஞ்சண் முகமாய்ச் சகளீ கரித்தனந்தற்
கொத்தி யுதறும் பசுந்தோகை விந்தாக் குணக்குன் றழியாமெய்ப்
பத்தி யாக விளையாடும் பரம பால னருட்பார்வைக்
கொத்தி நின்றார் தாமெவரு முண்டோ கண்டீ ருலகோரே.

திருச்செந்திற் றிருவிளையாடற் புராணம்.

உமாதேவியார் வணக்கம். வேறு.

பவள வரைமேற் படர்ந்தனைய பச்சைக் கொடியா மெனப்பகர்வார்
அவளெம் பெருமான் றனதுதிரு வருளா மென்ப தறியாரோ
இவளெங் கிகப்ப ளிவளிகந்தெங் கிகப்ப துயிரு மிவ்வுலகும்
அவளென் னிதயாம் போருகத்துக் களியாம் படிகண் ணளிகொள்வாம்.

விக்கினேசுவரர் வணக்கம். வேறு.

மூர்த்த மைந்தினால் முயன்றனர் தொழிலைந்து முறையே
தீர்த்த ரங்கவர் செயற்கிடை யூறுசே ராமை
ஆர்த்து வந்தனை செய்தக்கோன் கரிமுகத் தமலன்
பார்த்தெ மக்கும்விக் கினம்வரா வகைபர வுதுமே.

முருகக்கடவுள் வணக்கம். வேறு.

வரமும் பெரியன் மாயையினில் வலியன் மெலியன் வாலறிவிற்
றரமு மறிந்து பெருஞ்சூரைத் தடுத்தாட் கொள்ளுந் தகவுடையோன்
அரமு நடுங்கு நெடுஞ்சத்தி யஃது மவன்றன் சிற்சத்தி
கரமுஞ் சிரமு முரமுமவன் கழலின் றுணையைக் கலந்திடுமே.

வித்வான், ஜி. சுவாமிநாதன் ஆசாரி,
கோட்டாறு.

சாத்திரப் பகுதி.

நியாயமாலா.

(முன் தொடர்ச்சி.)

85. நம்ரசாகா நியாயம்: — நம்ரசாகை—வளைந்த மரக்கிளை, நியாயம் – திருஷ்டாந்தம். இது சாக்ஷாத்காரவடிவ அவஸ்தானரூப நிர்விகல்ப சமாதியில் பிரமாகார ஸ்திதி பிரயத்தனமின்றியே சித்தித்துள்ளவாறிதுபோலவென்கின்றது. அதாவது: இயல்பாய் வளைந்த கிளையானது கையினாற் பிடித்திழுத்துக்கொண்டிருத்தலாதி முயல்வின்றியே வளைந்துள்ளவாறுபோல வென்பதாம்.

524

86. லீடாலீட நியாயம்: — லீடம் – கிரகித்தல், அலீடம் – கிரகியாமை, நியாயம் – திருஷ்டாந்தம். இது நூற்பொருள் நன்ருய் விளங்காமைக்குக் காரணம் இதுபோன்றமையா லென்கின்றது. அதாவது: ஓர் பதார்த்த உணர்வு சிலபாகம் கிரகிக்கப்பட்டும் சிலபாகம் கிரகிக்கப் படாமலு மிருக்குமாயின் அப்பதார்த்த ஞானம் செவ்வைப்படாமைபோல வென்பதாம்.

87. மகோததி நியாயம்: — மகோததி – சமுத்திரம், நியாயம் – திருஷ்டாந்தம். இது லாபாலாபங்களால் கேத மோதங்களை யடையாத பெரியாரியல்பு இத்தன்மையதென்கின்றது. அதாவது: சமுத்திரமானது நதிப் பிரவேசத்தால் பெருகுதலும், மேகத்தால் ஆகர்ஷிக்கப்படலால் குறைதலுமின்றி யென்றும் ஒரு நீர்மையதாயிருத்தல்போல வென்பதாம்.

88. நேத்திராஞ்ஜன நியாயம்: — நேத்திரம் – கண், அஞ்ஜனம் – மை, நியாயம் – திருஷ்டாந்தம். இதுதான் கற்ற கல்வி ஆன்ம விளக்கத்தின் பொருட்டாகாமல் அனான்ம விளக்கத்தின் பொருட்டுபயோகமாமா றிதுபோலவென்கின்றது. அதாவது: கண்ணுக்கிட்ட மையானது தன்னைக் (கண்ணைக்) காண உபயோகப்படாமல் பிறவஸ்துவைக் காணமாத்திரம் உபயோகமாமாறுபோல வென்பதாம்.

அநந்தபத்மநாபஸ்வாமி,

காஞ்சிபுரம்.

பிரணவப் பகுதி.

பிரணவம் (1) ஓர் பறை (2) ஓங்காரம். ஆதி அக்ஷரம் பிரணவமானது சிருஷ்டிக்கு முன்னுள்ள அவசரத்திலே பிரமத்தின் வேருகாத சிற்சோதியாகவுள்ளது. அது சிருஷ்டியின் பொருட்டு விகாரப்படுமிடத்து விந்து ரூபமாகக்கிடக்கும் அவசரத்திலே அதனிடத்துளதாகிய வைந்தவ சக்தியினாலே புருஷாமிசமாகிய நாதம் கம்பிதமாகும். அஃதாவது வட்டவடிவினதாகிய விந்து விஷமப்பட்டு அண்ட வடிவுபெறும் எனவும் பிரணவம் விஷமப்பட்ட விடத்து நாதமென்றும் பெயர்பெறும். காரணத்திலொடுங்கிய வுலகத்தை மீளவு மெழுப்புவது சைதன்னிய சேஷ்டையேயாம். சைதன்னிய சேஷ்டையின்றி உலக மியங்காது. ஐரோப்பிய பௌதிக தத்தவ பண்டிதர்களும் சேஷ்டையே சிருஷ்டிக்குக் காரணமென்பார்கள்.

அந்தச் சேஷ்டை புரிபோலச் சுழன்று செல்வதென்பது ஐரோப்பியர் மதம். ஆரிய சாஸ்திரங்களும் பிரணவம் சங்கு வடிவினது என்று

525

கூறுகின்றனவாதலால், இரண்டிற்கும் வேறுபாடு காண்கிலேம். சங்கு தன்னிடத்தே ஆகாய வெளியும் புரியுமுடையதாதலின் பிரணவத்திற்குக் குறியாயிற்று.

பிரணவமாவது இருவகையேயாம். அஃதாவது தூலப் பிரணவம் சூக்குமப் பிரணவம். ஹ்ரீம் என்பது ஸ்தூலமும் ஓம் என்பது சூக்குமமுமாம். பிரணவம் பதினாறு உறுப்புக்களாலாயது. அவ்வுறுப்புக்கள் மாத்திரை யெனப்படும். அச்சோடச பிரமாணத்தி னளவாவன.

1 அ, 2 உ, 3 ம், 4 அர்த்தம், 5 நாதம், 6 விந்து, 7 கலை, 8 களாதீதை, 9 சாந்தி, 10 சாந்தியாதீதை, 11 உன்மனி, 12 மனோன்மணி, 13 புரி, 14 மத்தியமை, 15 பசியந்தி, 16 பரை. இப்பதினாறும் நூற்றைம் பத்தாறாகவும் வகுக்கப்படும். இவையெல்லாம் அப்பைய தீக்ஷிதர் செய்தருளிய அநுபூதிமீமாம்சா பாஷ்யத்திலே விரித்துரைத்திருக்கின்றனர்.

அகரம் பிரமாவையும், உகரம் விட்டுணுவையும், மகரம் ருத்திரனையுங் குறிக்குமென்பாரும், அகரம் விண்டுவையும், உகரம் உருத்திரனையும், மகரம் பிரமாவையும் குறிக்குமென்பாருமாக, சைவ வைஷ்ணவ சமயிகள் இப்பிரணவப் பொருளிலே தம்முண் மாறுபடுவார்கள். அகரம் பிரமத்தைக் குறித்து நிற்றலால் அந்தப் பிரமத்தை விட்டுணுவென்றும் சிவனென்றும் தத்தமக் கிட்டமான பெயர்களான் வழங்கும் இவ்விருவரின் குறிக் கோட்க ளொன்றேயாம்.

பிரணவ சொரூபத்தை இதுவென் றெடுத்துரைத்தல் கூடாதெனச் சாத்திரங்கள் முறையிடுகின்றன வாதலின், உண்மை யுணர்ந்த ஞானிகளுக்கே அதன் பரப்பெல்லாம் புலனாமென்க. மந்திரங்க ளெவற்றினும் பிரணவமே சிறந்ததும் மோக்ஷ சாதனமாயுள்ளதுமாம். முண்டகோப நிஷத்தில் இப்பிரணவமாகிய ஓங்காரத்தைக் குறித்துச் சொல்லப் பட்ட வாக்கியம் வருமாறு :

ஓம் என்பது வில்லு, ஆன்மாவே பாணம், பிரமமே குறி. இடையறாத் தியானத்தினாலேயே குறியை எய்தற்கூடும். குறியிற் புதைந்த பாணம்போல ஆன்மா பிரமத்திற் புதையக்கடவது. பிரணவம் என்பதன் பொருள் அழியாதது. கழிந்ததும், நிகழ்வதும், வருவதுமாகிய முக்கூற்றுப் பிரபஞ்சமெல்லாம் ஓமெனும் பொருளே. அகாம் ஜாக்கிர வுலகமா யாவரும் வசித்தற் கிடமாகவுள்ளது. இதனை நன்குணர்பவன் இஷ்ட போகத்தை யடைகிறான். உகரம் சொப்பன மாய்ப் பிரகாசமாகவுள்ளது. மகரம் சுஷுப்தியாய் முடிவிடமாகவுள்ளது. (மாண்டூக்கியம்)சுபம்.

T. S. அங்கமுத்துமுதலியார்,
உபாத்யாயர், கிளாப்பாளையம்.

சமாசாரம்.

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம்
ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்.

இப்பெரியார் சுமார் நான்கு மாதங்களாகக் காஞ்சீபுரத்தி லெழுந்தருளி அந்நகர வாசிகட்குத் தமது சர்வமத அவிரோதமான அரிய உபந்நியாசங்க ளநேகங்களால் நல்லறிவைப் புகட்டி, காஞ்சியம்பதிக்கோர் இரத்தின தீபம்போன்று விளக்கமுற்றிருந்ததுமன்றி,

நிகழும் ஆனந்த ௵ ஆடி ௴ 26-ம் ௳ (10-8-14) சோமவாரம் இரவு தமது உபாசனாமூர்த்தியாகிய ஸ்ரீ கல்யாண சுப்பிரமணியப்பெருமானை மயில்வாகனத்தில் எழுந்தருளச் செய்வித்துத் தாமும் ஓர் புஷ்ப விமானத்தி லாரோகணித்துக்கொண்டு காஞ்சி நகரவாசிகளது அகமுமுகமுங் களிகூர நகரப் பிரதக்ஷணக் காட்சிதந்தது எத்திறத்தினாலும் கொண்டாடத்தக்கதாயிருந்தது.

இப்பெரியாரைப் போன்றே மற்றைய மடாதிபதிகளாகிய பெரியாரும் லோகாநுகூலார்த்தம் பலவிடங்கட்கும் விஜயஞ்செய்து மதோபதேசம் செய்துவருவாராயின் நம் ஆரிய மதம் பண்டுபோல் விளங்கி நிலைபெற்றிருக்கைக்கு ஐயம் சிறிதுமின்று; ஆதலின் மற்றைய மடாதிபதிகட்கும் இவ்வரிய பெரிய காரியத்தின்கண் பிரவர்த்தி யுண்டாமாறு தண்ணருள்புரிய உமாநாதனைப் பிரார்த்திப்போமாக. சுபம்.

(11 – 8 – 14) காஞ்சீபுரம். ஹிதவசனி.

திண்டிவனம் ஈசுவர பக்த ஜன சபை.

இச்சபை வாரமிருமுறை (வியாழன், ஞாயிறு) தவறாது மாலை 6 முதல் 9 மணிவரையிலும் சபையின் அங்கத்தினர் ஒவ்வொருவராலும் ஒவ்வோர் சரித்திரம் சைவ, வைணவ பேதமின்றிப் பிரசங்கிக்கப்படுகிற பழக்கம் அபிவிருத்தி யடைந்துகொண்டு வருகிறது. இதற்கெனப் பொருட் செலவையும் தேக சிரமத்தையும் கவனியாது, சபையின் சபாநாயகராகும் வக்கீல் ஸ்ரீமான் குமாரசாமிப்பிள்ளை அவர்கள் இச்சபை விருத்தியடைய வேணவாகொண்டு புரியும் பெரு முயற்சி பெரும்பாலும் பெருமை பாராட்டக்கூடியதே. சென்ற (2-8-14) ஆதிவாரம் இரவு ஸ்ரீ அப்பூதியடிகணாயனார் சரித்திரம் சபாநாயகர் கட்டளைப்படி சில குறிப்புகளுடன் வெகு விமரிசையாய்ச் சபையின் அங்கத்தினர் ஒருவரால் நடைபெற்றது. 9-ம் ௳ ஆதிவாரம் மற்றொருவரால் ஸ்ரீ ஆண்டாள் வைபவம் மிக விமரிசையுடனும் பக்தியுடனும் நடைபெறுமென்று நம்பப்படுகிறது.

இவ்வாறே இச்சபையானது நாளடைவில் விருத்தியடைந்து கற்றவர் மெச்சுமாறு கருணைக்கடலாகும் கடவுள் கடாக்ஷிப்பாராக.

(ஷ்டி சபையின் அங்கத்தினரில் ஒருவரான)

ஆர். வீ. சுப்பராயலுரெட்டியார், இரட்டணை.